விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 053 வள்ளுவர் ஆண்டு 2057 தை 27 செவ்வாய்க்கிழமை (10.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## செம்மணி மனித புதைகுழிக்குள் தேங்கி நின்ற மழைநீர் அகற்றம்



(யாழ்ப்பாணம்)
செம்மணி மனித புதை குழிக்குள் தேங்கி நின்ற மழைநீரை வெளியேற்றும் நடவடிக்கை யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் மேற்பார்வை யில் நேற்று முன்னெடுக்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு

### மார்ச் 16ஆம் திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
செம்மணி - சித்துப் பாத்தி மனித புதை குழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி கள் தொடர்பான தீர் மானம் எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி அறி விக்கப்படும் என யாழ்ப் பாணம் நீதிவான் நீதி மன்றம் நேற்று திங்கட் கிழமை அறிவித்துள் ளது.

இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத் தில் நேற்றுத் திங்கட்

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகின்றது

### கிவுல் ஓயாத் தெளிவூட்டல் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு



(வவுனியா)
கிவுல் ஓயாத் திட்டம் மூலம் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகின்றது என கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் தெளிவூட்டல் கலந்துரையாடலில் நேற்று சுட்டிக் காட் டப்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையில் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
பொன்னாலையில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர்

15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் இ.போ.ச

## நடத்துநரைத் தாக்கிய இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இலங்கைப்போக்குவரத் துச் சபைக்குச் சொந்தமான பேருந்தின் நடத்துநர் மீது தாக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## பேராசிரியராக பதவி உயர்வு



15ஆம் பக்கம் பார்க்க

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு கோட்டாவுக்கு அழைப்பு



(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகு மாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

கொழும்புக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட் டுத் தொகுதிக்குச் சொந்தமான

15ஆம் பக்கம் பார்க்க



## மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள்

நாமல் வலியுறுத்து

07ஆம் பக்கம் பார்க்க

## 100 புற்றுநோயாளிகள் தினசரி அடையாளம்

### பிரதி அமைச்சர் வைத்தியர் ஹம்சக



(கொழும்பு)
தினசரி சுமார் 100 புதிய புற்று நோயா ளிகள் பதிவாவதாக சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹம்சக விஜேமுனி தெரிவித்துள் ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் சுவிஸ் தூதரகத்தின் முயற்சி நிறுத்தம்

(கொழும்பு)
இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசி யல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புகள் அனைத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டுக் குக் கொண்டு வரும் நோக் கில் கொழும்பில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகத் தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி தமிழ்த் தேசி யக் கட்சிகளின் பிரதிநிதி களுக்கு இடையில் ஒழுங்கு படுத்தப்பட்ட விசேட சந் திப்பு காலவரையறை குறிப் பிடாது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கு பற்ற இருந்த அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள் ஒவ் வொருவருக்கும் இந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டிருப் பது பற்றிய தகவல் நேற்றுக் காலை

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் தெளிவூட்டல் கூட்டமொன்று நேற்று மனலாறு பகுதியிலுள்ள மகாவலி அதிகார சபையின் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேசசபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்திற்காக திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்களை சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள், கமக்காரர் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டாலும் தமிழ்ப்பகுதிகளைச் சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள், கமக்காரர் அமைப்புக்களுக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் கூட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அவர்களால் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பிலான நீண்டதொரு ஆவண விளக்கத்தினை வழங்கியிருந்தார்.

இதன் பிற்பாடு பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் திட்டம் தொடர்பில் இடம்பெற்றது. இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தினை பாதிக்கப்படும் தமிழ் மக்களின் சார்பாக நிகழ்த்தியிருந்தார்.

கிவுல் ஓயாத் திட்டமானது 1983இல் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட முயற்சிக்கப்பட்டபோதும் அது கிடப்பில் போடப்பட்டது.

அதாவது குறித்த பகுதியில் இதுவரை ஒரு போகம் விவசாயம் செய்யும் விவசாயிகள் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் இரண்டு போகம் விவசாயும் செய்யும் நிலையை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாக காணப்பட்டது.

இந்தத் திட்டத்தில் பயனடையும் தரப்பினர் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக கிம்பிலிவெவ பகுதியில் 37 வீடுகள் நீருக்குள் மூழ்கின்றமை உள்ளிட்ட பயனடையும் தரப்பினர் தொடர்பான விடயங்களே தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும், கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதிக்குள் அகப்பட்டு பாதிக்கப்படும் வவுனியா வடக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலமான வெடிவைத்தகல், மருதோடை ஆகிய தமிழ் கிராம சேவையாளர் பிரிவுகள் தொடர்பில் எதுவித விடயங்களும் இத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்படவில்லை எனக் குற்றம் சாட்டினார்.

2011ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 15 வருடங்களாக இரகசியமாகச் செய்யப்பட்ட இத்திட்டம் பற்றி தற்போது தான் மகாவலி அதிகார சபை பகிரங்கமாக முதல் கலந்துரையாடலை செய்கின்றமை பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

அத்துடன் இக்கூட்டத்திற்கு கூட திட்டத்தால் பயன்பெறும் மக்களையும் தரப்பினரையும் அழைத்துள்ளீர்களே தவிர திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களையோ தரப்பினரையோ அழைக்கவில்லையே. ஏன் இந்த பாரபட்சம் எனவும் கேள்வி யெழுப்பினார்.

கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தின் நீரேந்துபகுதியானது வன வள திணைக்களத்திற்குச் சொந்தமான காடு என விளக்கமளிக்கப்பட்டது. இதன்போது குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் வனவள திணைக்களத்தினால் தமது பகுதி என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களுக்குள் எமது பூர்வீக குளங்கள் வயல் நிலங்கள் உள்ளதெனவும் இவ் இடங்களை விடுவித்தல் பற்றி இங்கிருக்கும் இரண்டு அரச அதிபர்களுடனும் மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களிலும் பலமுறை கோரியுள்ளேன். ஆனால் அவை எவற்றையும் வனவள திணைக்களம் இதுவரை விடுவிக்கவில்லை. ஆகவே நீரேந்து பகுதிக்குள் எமது விவசாய நிலங்கள் உள்ளது எனத் தெரிவித்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதுதான் இந்தக் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் விளக்கம் தருவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தத் திட்டத்தால் பாதிக்கப்படப்போகின்ற மக்களை ஒருபோதும் மகாவலி அதிகாரசபை அழைத்து கலந்துரையாடவில்லை.

கடந்த 23.01.2026அன்று பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களோடு கலந்துரையாடலை ஏற்படுத்துமாறு கோரியிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து எம்மால் இந்த கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிராக கடந்த 02.02.2026 அன்று பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்தகைய எமது கோரிக்கைகள் மற்றும் ஆர்ப்பாட்டத்தின் மூலம் எழுந்த அழுத்தங்கள் காரணமாகவே இவ்வாறு இந்தக் கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தத் திட்டத்திற்காக அபகரிக்கப்படுகின்ற தமிழ் மக்களின் விபரங்கள் இதிலே மகாவலி அதிகாரசபையால் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக கூழாங்குளம் வயல் காணிகள் 88ஏக்கர், வெடிவைத்தகல்லு 87ஏக்கர், வெடிவைத்த கல்லு கிராமம் 124 ஏக்கர், ஈச்சங்குளம் வயல் 95 ஏக்கர், கோவில் புளியங்குளம் 158 ஏக்கர், காட்டுப்பூவரசங்குளம் 258 ஏக்கர், காஞ்சூரமோட்டைக் கிராமம் 100ஏக்கர் உள்ளடங்கலாக மொத்தம் 910 ஏக்கர் அபகரிக்கப்பட்டுள்ளதாகக் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் தற்போது அந்த விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை எனப் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன் போது சுட்டிக் காட்டினார். (ம-7,299)

## தமிழ்க் கட்சி...


முதல் சுவிஸ் தூதரக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டதாக உறுதிப்படுத்த முடிந்தது.

தமிழர் தரப்புக்கள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தும் சுவிஸ் தூதரக முயற்சி ஒருபுறம் நடக்க அதற்குச் சமாந்தரமாக மறுபுறத்தில் அந்தக்கூட்டத்தில் பங்கு பற்றவிருந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள்தாமும் உள்ளடங்கிய தமிழ்த் தேசிய பேரவையின் பெயரில் அதே போன்ற கூட்டம் ஒன்றை 19 ஆம் திகதிக்கு முன்னர் 15 ஆம் திகதியளவில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முயற்சி எடுத்த பின்னணியில் - அது பற்றிய செய்தி நேற்றுக் காலை வெளியான சூழலில் - தன்னுடைய முயற்சியை உடனடியாக இடைநிறுத்தும் தீர்மானத்தை சுவிஸ் தூதரகம் மேற்கொண்டதாக அறிய வருகின்றது.

அரசியல் கட்சிகளுக்கு மேலதிகமாக பல சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் 15 ஆம் திகதி தாம் நடத்த உத்தேசித்த கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியப் பேரவை அழைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒருமித்த நிலைப்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியை சுவிஸ் தூதரகம் குழப்பமின்றி முன்னெடுக்க விரும்பிய சூழலில் அது பற்றிய செய்திகள் வெளியானமை சுவிஸ் தூதரகத்தை விசனத்துக்குள் தள்ளி இருப்பதாகவும் தெரியவருகிறது. (ம-7)

## ஓய்வுநிலை அதிபர் பரஞ்சோதி காலமானார்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர் மு.பரஞ்சோதி (வயது -79) காரை நகரில் நேற்றுக் காலமானார்.

கணிதத்துறை பட்டதாரியாகவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தராகவும் விளங்கிய இவர் 1998 தொடக்கம் 2002 வரை கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர். (ந-7)

## 100 புற்று...

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் புதிய மத்திய நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தினந்தோறும் பதிவாகும் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

பெரும்பாலான நோயாளர்கள் நோயின் முற்றிய நிலையிலேயே அடையாளம் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இந்நோயினால் ஒரு நாளைக்கு சுமார் 40 பேர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கையில் நாள்தோறும் 15 பெண்கள் மார்பகப் புற்றுநோய்க்குள்ளாவதாகவும் அவர்களில் மூவர் தினசரி உயிரிழப்பதாகவும் தேசிய புற்றுநோய் தடுப்புத் திட்டம் தெரிவிக்கின்றது என்று சுட்டிக் காட்டினார்.

மேலும், 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு மாதமும் சுய மார்பகப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறும், 20-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறையும், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருடத்திற்கு ஒருமுறையும் வைத்தியசாலைக்குச் சென்று மார்பகப் பரிசோதனை செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தினார். (ம-7)

1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அப்புத்துரை செல்லம்

திதி: அபரபக்க நவமி

தோற்றம் 24.11.1939

மறைவு 22.01.2025

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்றல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த
நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது



இல. 82A, நாகலிங்கம் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில். (6775)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் . போதனா வைத்திய சாலையின் பின்புறமாக உள்ள பொன்னம்பலம் வீதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணியினை கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பரவு செய்த வேளை , சந்தேகத்திற்கு இடமான பொதி ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் பொதி தொடர்பில் சோதனையிட்டனர்.

அதனுள் கையெறிகுண்டு, கலிபர் ரக துப்பாக்கியின் தோட்டாக்கள் காணப்பட்டுள்ளன.

பொதியினுள் உள்ள வெடிபொருட்கள் தொடர்பில் யாழ். நீதவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்த பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அதன் பின்னரே மீட்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பிலான தகவல்களை வெளியிட முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-33)

## பொது இடங்களில் கழிவுகளை வீசினால்
# கடும் நடவடிக்கை
### சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ்

**(சாவகச்சேரி)**

**சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் வெற்றிலை துப்புபவர்கள் மற்றும் கழிவுகளை வீசுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளையில் தண்டப்பணமும் அறவிடப்படும் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பொது இடங்களில் வெற்றிலை துப்புதல் ஒரு நீண்ட காலப் பிரச்சினையாகவும் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது.

முதல் தடவையாக இந்தக் குற்றத்தை செய்யும் போது 2 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும், அதே குற்றத்தை இரண்டாம் முறை செய்யும் போது 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் அறவிடப்படும்.

நகரசபை எல்லைக்குட்பட்ட சந்தை, பேருந்து நிலையம் உள்ளிட்ட நகர்ப்புறங்களில் இந்த நிலைமை உன்னிப்பாகக் கவனிக்கப்படும்.

அதேநேரம் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பயன்படுத்தும் பம்பர்ஸ் போன்ற கழிவுகளை வீதிகளில் வீசுவது சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.

எனவே அதனைத் தவிர்க்கும் முகமாக முதற்தடவை யாக குறித்த கழிவுகளை வீசுவோருக்கு எதிராக 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் அதே குற்றத்தை மீளவும் செய்தால் 10 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கழிவுகளை நவீன முறையில் அழிப்பதற்கான நடவடிக்கைகளை நகரசபை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளது. எனவே அதுவரை பொதுமக்கள் கழிவுகளை வீதிகளில் வீசாமல், நகரசபையால் ஒதுக்கப்பட்ட கழிவுத்தொட்டிகளிலோ அல்லது தத்தமது வீடுகளில் பாதுகாப்பாக எரித்தோ அழிக்க முடியும் என தெரிவித்தார். (8-30)

## பகிரங்க அறிவித்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருட்களாக பாரப்படுத்தப்பட்டு இன்று வரை உரிமை கோரப்படாத 70036223 இலக்கமுடைய LUMALA பெண்கள் துவிச்சக்கர வண்டி இந் நீதிமன்ற பாதுகாப்பிலுள்ளது.

குறித்த இலக்க துவிச்சக்கர வண்டி தொடர்பில் உரிமையாளர்கள் யாராவது இருப்பின் இவ் அறிவித்தல் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அல்லது 20.02.2026 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நாட்களில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவளாரைத் தொடர்பு கொண்டு குறித்த துவிச்சக்கர வண்டி தொடர்பான உரிமையை உரிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தவறும் பட்சத்தில் குறித்த சான்றுப்பொருட்கள் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் 432 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறித்த நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)



முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் வெளியீடான "கலைஞனின் குரல்" இதழ்-7 வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் மன்றத்தின் தலைவர் இரா.மதிகரன் தலைமையில் நடைபெற்றது.

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு . மாணவர்களின் "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டு நிகழ்வுகள் கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் நாளை புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செ.பாஸ்கரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜாவிற்கு "நம் மண்ணின் வானிலை வல்லோன்" எனும் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்வு, இணையத்தின் தலைவர் ந.சுகிர்தராஜ் தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன்போதே பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா கௌரவிக்கப்பட்டுள்ளார். (படம்:சிவசாந்தன்)

## போக்குவரத்திற்கு இடையூறு; 65 கால்நடைகள் மடக்கிப்பிடிப்பு


(நெளுக்குளம்)

போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகளில் அலைந்து திரிந்த கட்டாக்காலி கால் நடைகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் நேற்று முன்தினம் இரவு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், அண்மைய நாட்களில் இரவு நேரங்களில் வீதிகளில் நிற்கும் கால்நடைகளால் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. இதனைத் தடுக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகளில் கால்நடைகளை மடக்கிப் பிடிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்நடவடிக்கையின் போது மாடு, கன்றுகள் என மொத்தமாக 65 கால்நடைகள் பிடிக்கப்பட்டு அவை தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன.

முன்னதாக மக்களிடம் பல முறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை கட்டுப்படுத்த தவறியுள்ளனர். பிடிக்கப்பட்ட கால்நடைகளை மீட்டுக்கொள்ள உரிமையாளர் ஒருவர், ஒரு கால் நடைக்கு 10 ஆயிரம் ரூபா தொகையை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் வீதிகளில் கால்நடைகள் நிற்பதால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கவும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாக்கவும், இது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என தவிசாளர் வே.கரிகாலன் அறிவித்துள்ளார். (8-30)

## மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை மற்றும் புங்குடுதீவுப் பகுதிகளில், மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரத்தில் குறித்த நபர் நீண்டகாலமாக ஈடுபட்டு வருவதாகப், பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த நபர் சட்டவிரோதமான முறையில் மதுபானத்தை விற்பனை செய்ய எடுத்துச் சென்ற நிலையில் , பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் தனது வீட்டில் வைத்தும் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை என்பவற்றில் ஈடுபட்டு வருவதாகவும் அதற்கு குடும்பத்தினரும் ஒத்துழைத்துள்ளதாகவும் தமது விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசிய மட்ட கால்பந்து போட்டி

# இறுதிப் போட்டியில் மோதவுள்ள மகாஜனா - யூனியன் கல்லூரி அணிகள்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட சமபோஷா கிண்ணத்திற்கான 14 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் யாழ் மாவட்ட பாடசாலை அணிகளான தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

குறித்த அரையிறுதி போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து பொலநறுவை றோயல் கல்லூரி அணி மோதியது

இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது.

அடுத்த அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து களுத்துறை சிறி சுவேலி மகா வித்தியாலய அணி மோதியது. இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 11:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி சுமார் 7 வருடங்களாக தேசியத்தில் பதக்கத்தை சுவீகரித்துள்ளதுடன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி முதன் முறையாக தேசிய மட்ட இறுதியாட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் இறுதிப் போட்டி நாளை புதன்கிழமை கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி- 90-104)







## 14 வயதிற்குட்பட்டோருக்கான தேசிய கால்பந்தாட்ட போட்டி

### சென்.பற்றிக்ஸ் கல்லூரி தகுதி

இலங்கை பாடசாலைகள் காற்பந்தாட்ட சம்மேளம் அகில இலங்கை ரீதியில் நடத்திய (U-14) பாடசாலை மாணவர்களுக்கான (சமபோஷா) கிண்ணத்துக்கான போட்டிகள் காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச சபை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கும்ம விளையாட்டு மைதாணங்களில் இம் மாதம் 6 ,7 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

குழுப் போட்டிகளில் சம்பியனாக வந்த யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் காலிறுதிக்கு முந்திய ஆட்டத்தில் பதுளை அல் அதான் கல்லூரியை 3:2 என்ற கோல் கணக்கிலும் காலிறுதியாட்டத்தில் நீர்கொழும்பு அல்ஹிலால் சர்வதேச பாடசாலையை 4:2 என்ற கோல் கணக்கிலும் அரையிறுதியாட்டத்தில் கொழும்பு Gateway சர்வதேச பாடசாலையை 2:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றதோடு நாளை புதன் கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் கொழும்பு ஷாகிராக் கல்லூரியுடன் விளையாட உள்ளனர். (நி)



## ரி-20 உலகக் கோப்பை

# இந்தியாவுடன் விளையாட நிபந்தனைகள் விதித்த பாகிஸ்தான்

ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்தியாவுடனான போட்டியில் விளையாட மூன்று நிபந்தனைகளை ஐ.சி.சிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விதித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா மற்றும் இலங்கையில் ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றன. கொழும்பில் நடைபெறும் போட்டியில் பெப்ரவரி 15 ஆம் திகதி இந்தியாவும் பாகிஸ்தானும் மோதவுள்ளன.

ஆனால், வங்கதேச அணியை உலகக் கோப்பை தொடரில் இருந்து நீக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தியாவுடனான போட்டியில் பாகிஸ்தான் விளையாடாது என்று அந்நாட்டு அரசு அறிவித்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கு பயணம் செய்த ஐ.சி.சி துணைத்தலைவர் இம்ரான் கவாஜா மற்றும் பிரதிநிதி முபஷிர் உஸ்மானி ஆகியோர் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தலைவரும் அமைச்சருமான மொஹ்சின் நக்வியை சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அப்போது இந்தியாவுடனான போட்டியில் விளையாட மூன்று நிபந்தனைகளை ஐ.சி.சிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விதித்துள்ளது.

தொடர் வருவாயில் அதிக பங்கு, இந்தியாவுடன் இருதரப்பு போட்டிகளை தொடங்க ஐ.சி.சியின் உதவி மற்றும் பாகிஸ்தானுடன் விளையாடும்போது இந்திய வீரர்கள் மரபுப்படி கைக்குலுக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், வங்கதேச கிரிக்கெட் வாரியத்தலைவரும், தங்கள் நாட்டுக்கு ஐ.சி.சி தொடர் நடத்த வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

தற்போது பாகிஸ்தானின் கோரிக்கை தொடர்பாக ஐ.சி.சி மற்றும் பி.சி.சி.ஐ நிர்வாகிகள் ஆலோசனை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமருடன் ஆலோசனை நடத்தியப் பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இறுதி முடிவை அறிவிக்கும் எனத் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம்

(பூநகரி)


பூநகரி பிரதேச அரசசேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தலைவர் சு.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் வே.ஆயகுலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8-84)

# கைக்குண்டு மீட்பு!

(தருமபுரம்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தை அண்டிய பனங்கண்டி பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியை அண்மித்த பகுதியில்அண்மையில் பெய்த மழை காரணமாக மண்ணில் புதையுண்ட நிலையில் கைக்குண்டு ஒன்றும் மோட்டார் செல் ஒன்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் இனங் காணப்பட்டுள்ளது குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை



மேற்கொண்டு வருவதுடன் குறித்த பகுதியில் இனம் காணப்பட்டுள்ள வெடி பொருட்களை பாதுகாப்பாக அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)



வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவராக நியமனம் பெற்ற க.பிரகாஸிற்கு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களால் ஆளுநர் செயலகத்தில் வைத்து நியமனக் கடிதம் நேற்றையதினம் வழங்கி வைக்கப்பட்டது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 320 | 370 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 300 | 350 | 350 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 180 | 90 |
| கோவா | 250 | 200 | 200 | 250 | 200 |
| கரட் | 300 | 420 | 400 | 400 | 350 |
| பூசணி | 100 | 120 | 100 | 100 | 70 |
| புடோல் | 150 | 200 | 150 | 200 | 220 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 250 | 270 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 150 | -- |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 500 | 450 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | -- | 200 |
| பயற்றங்காய் | 800 | 500 | 400 | 500 | 200 |
| லீக்ஸ் | 400 | 440 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 250 | 180 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | -- | -- |
| போஞ்சி | 200 | 220 | 300 | 250 | 250 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | -- | 50 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | -- | 110 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | -- | 375 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 150 | 90 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | -- | 100 |




**பூர்விகா**




**ராகுலன்**





**தனுசன்**




**தட்சாயினி**




**பூஜா**




**சானுகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு நிவாரணம்; உலகவங்கி நிதியுதவி

## அமைச்சர் அறிவிப்பு

**(கொழும்பு)**
**விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உலக வங்கி உதவியின் கீழ் 2.5 பில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கால் நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**



தேசிய கால்நடை அனர்த்தத்திற்குப் பிந்தைய அவசர தடுப்பூசித் திட்டத்தின் தொடக்க விழாவிற்குப் பிறகு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டித்வா புயலினால் சேதமடைந்த பண்ணைகளுக்காக 3.2 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான பணம் செலுத்தப்பட்டுள்ளது.

மாடுகள், பன்றிகள், ஆடுகள், புரொய்லர் கோழிகள் அழிக்கப்பட்ட பண்ணைகளுக்கு இந்த இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இழப்பீட்டுத் தொகைகளுக்கு மேலதிகமாக, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அனர்த்தத்திற்குப் பிந்தைய அவசர தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக உலகவங்கி உதவியின் கீழ் 2.5 பில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

விலங்குகளை நோய்களில் இருந்து பாதுகாப்பதே இந்த தடுப்பூசி செயல்முறையின் நோக்கம். இது சுமார் 2 மாதங்களுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அனர்த்தங்களால் அழிக்கப்பட்ட பண்ணைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவையான ஆதரவும் வழங்கப்படும் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (8)

# சிறுவர் துஷ்பிரயோகம்; 4,289 வழக்குகள்

(கொழும்பு)
சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியிலுள்ள மேல் நீதிமன்றங்களில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

1998 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவைக்கு அமைய இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, நாடளாவிய ரீதியிலுள்ள மேல் நீதிமன்றங்களில் 4 ஆயிரத்து 289 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் ஆயிரத்து 683 வழக்குகள் கடந்த ஜனவரி மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், சிறுவர்கள் தொடர்பான ஆபாச வெளியீடுகள், பாலியல் செயற்பாடுகளுக்காக சிறுவர்களை வாடகைக்குப் பெறுதல் அல்லது பணியில் அமர்த்தல், பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# திருமலை புத்தர் சிலை விவகாரம்; விளக்கமறியல் நீடிப்பு



(திருமலை)
திருகோணமலை பகுதியில் புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக பலாங்கொட கஸ்ஸப தேரர் உட்பட நான்கு பௌத்த பிக்குகள் மற்றும் ஐந்து பேர் பெப்ரவரி 11 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் நீதிவான், அந்தக் குழுவை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.


கடந்த ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி, திருகோணமலையில் உள்ள ஒரு விகாரையில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை அகற்ற முயற்சித்ததைத் தொடர்ந்து அமைதியின்மை ஏற்பட்டது.

இருப்பினும், இந்த சம்பவம் தொடர்பாக, கடலோர பாதுகாப்புத்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்தது. கட்டுமானம் அங்கீகரிக்கப்படாதது என்றும், சிலையை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது,பிக்குகள் மற்றும் உள்ளூர்வாசிகளால் கடும் எதிர்ப்பு எழுந்தது.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கு தொடர்பாக, சம்பந்தப்பட்ட தரப்பினர் அழைக்கப்பட்டு, திருகோணமலை போதிராஜ விஹாரையில் புத்தர் சிலையை வைத்ததன் மூலம் கடலோர பாதுகாப்பு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அப்போதிருந்து, இந்த சம்பவம் தொடர்பாக அந்தக் குழு மேலும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளது. (நி)

# குறை கேள் அரங்கு




## அறிவாலயத்தின் முன்னே குப்பைகள் கொட்டுவதா?

தெற்காசியாவின் மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்றாகவும் யாழ்ப்பாணத்தின் கலாசார மற்றும் வரலாற்று அடையாளமாகவும் யாழ்ப்பாணப் பொது நூலகம் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் விரும்பிச் செல்லும் இடமாகவும் யாழ்.பொது நூலகம் விளங்குகின்றது.

அதனைச் சூழவுள்ள பகுதிகள் இன்று குப்பைகளாலும் பொலித்தீன் கழிவுகளாலும் தம் பொலிவை இழந்து வருகின்றன.

குறிப்பாக சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவுள்ள சப்பல் வீதியில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தை அண்டிய பகுதியில் தினமும் அதிகளவிலான கழிவுகள் கொட்டப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

நூலகத்தையும் பூங்காவையும் பார்வையிட வருபவர்கள் வீதியோரங்களில் சிதறிக்கிடக்கும் கழிவுகளைப் பார்த்து முகம் சுழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் பொலித்தீன் உறைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் மாத்திரம் அன்றி பயன்படுத்தப்பட்ட சிறுவர்களுக்கான பம்பஸ்கள் கூட சிதறிக்கிடக்கின்றன.


இதனால் அவ்விடத்தில் துர்நாற்றம் வீசுவதோடு நுளம்பு ,தொற்று நோய்கள் பரவும் அபாயமும் காணப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தி அதனூடாக குப்பை வீசுபவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தண்டம் விதிப்பதன் ஊடாக குப்பை கொட்டுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

அதிகாரிகள் தண்டம் விதிப்பது ஒருபுறம் இருக்க "எனது நகரம் எனது பெருமை" என்ற எண்ணம் ஒவ்வொரு பிரஜைக்கும் வரவேண்டும்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடத்தில் குப்பை கொட்டுவது என்பது எமது கலாசாரத்திற்கு இழைக்கப்படும் அவமானமாகும்.

எனவே யாழ்.மாநகர சபை அதிகாரிகள் இதனைக்கவனத்தில்கொண்டு 'கிளீன் யாழ்ப்பாணம்' ஆக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**அன்பு வாசகர்களே!**

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

"குறைகேள் அரங்கு",
ஆசிரியர் வலம்புரி,
இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துங்கள்

## அநுர அரசிடம் நாமல் இடித்துரைப்பு



(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை நடத்தி, வடக்கு மக்களுக்கான அதிகாரத்தை வழங்க, அரசு விரைந்து செயற்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கம்பஹா - திஹாரிய பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மக்களுக்காக மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும்.

நாட்டில் அடுத்து நடத்தப்படவுள்ள எந்தவொரு தேர்தலையும் சந்திப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது.

இதற்காக, கிராமிய மட்டத்தில் எமது அரசியல் குழுக் களைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் எந்தவித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்தார். (நி)

# போதைப்பொருட்களுக்கு அடிமையான சாரதிகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டாம்

## அமைச்சர் பிமல் எச்சரிக்கை

(கொழும்பு)


போதைப்பொருட்களுக்கு அடிமையான சாரதிகளை சேவையில் இணைத்தால் பேருந்து உரிமையாளர்களின் வாகன அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடுமையான எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்களாயின், பேருந்து உரிமையாளர்களின் வாகன அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும்.

அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போதைப்பொருட்களுக்கு அடிமையான சாரதிகளை சேவையில் ஈடுபடுத்தக் கூடாது என எச்சரித்துள்ளார்.

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது, அதிகளவான பேருந்து சாரதிகள் போதைப் பொருட்களை பயன்படுத்தியமை தெரியவந்ததை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)



# 500 மெற்றிக் தொன் அரிசியை வழங்கியது மியன்மார்

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மியன்மார் இலங்கைக்கு 500 மெற்றிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான மியன்மார் தூதுவர் மார்லர் தான் ஹ்டாய்க், இந்த அரிசியை நேற்று திங்கட்கிழமை வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் கையளித்துள்ளார்.

இதன்போது டித்வா சூறாவளியின் தாக்கத்தால் நாட்டின் விவசாய நிலங்களில் கிட்டத்தட்ட 20 சதவீதம் சேதமடைந்ததாக அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மியன்மார் நிதியுதவியை வழங்கியிருந்த நிலையில் தற்போது இந்த அரிசித் தொகையையும் கையளித்துள்ளது. (நி)

# லிட்ரோ விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திற்கான லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் பெப்ரவரி மாதத்திற்கான லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாவாகவும், 5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 1,482 ரூபாவாகவும், 2.3 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 04 - 1953

மறைவு 10 - 02 - 2006

“உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்”

அமரர். லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

அண்ணனே....
நீ இல்லாத நாட்கள்
எண்ணிக்கையில் சேர்ந்து விட்டாலும்,
என் உள்ளத்தில், நீ போகவில்லை.
உன் குரல் இன்னும்
என் மனசுக்குள் ஒலிக்கிறது,
உன் சிரிப்பு, என் துக்கத்தை
மெதுவாக கரைக்கிறது
ரத்தம் மட்டும் அல்ல
நம்மை இணைத்தது,
ஒரே ஆன்மாவின் இரண்டு பாதிகளாக
நாம் இருந்தோம்.

உலகம் முன்னேற சொன்னாலும்
சில நினைவுகள்
அங்கேயே நிற்கச் சொல்கின்றன,
அதில் நீயும் என்றைக்கும் நிற்கிறாய்
நீ கண்களுக்கு
தெரியாதவனாகினாலும்,
என் வாழ்வின் ஒவ்வொரு முடிவிலும்
உன் நிழல், என்னோடு நடக்கிறது
அண்ணனே...
நீ போகவில்லை,
இந்த உடம்பைத் தாண்டி,
என் ஆன்மாவாக மாறி விட்டாய்.

A.M.J. Textiles (6752) என்றும் உன் நினைவுகளுடன் - ஜோசப்

சேவைநலன் பாராட்டு



திருமதி. சுமதி தயாளன்
B.A,PGDE,English Special trained (SLTS-I)

சேவை விபரம்

- யா/நயினாதீவு மகா வித்தியாலயம் - 1997.01.10 - 1997.06.05
- யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை -1997.06.06 - 1999.01.17
- யா/பலாலி ஆசிரியர் கலாசாலை - 1999.01.18 - 2000.12.31
- யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை - 2001.01.01 - 2010.06.13
- யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் - 2010.06.14 - 2013.03.12
- யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி - 2013.03.13 - 2022.05.16
- யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் - 2022.05.17-2026.02.10

எமது பாடசாலையில் ஆங்கில பாட ஆசிரியராக சேவையாற்றி 10.02.2026 இன்று ஓய்வு பெறும் திருமதி. சுமதி தயாளன் அவர்கள் சகல நலன்களுடனும் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(6786)

வாழ்த்துவோர்—
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## ஜப்பானில் மீண்டும் ஆட்சியை பிடித்தார் பிரதமர் தகாய்ச்சி



(டோக்கியோ)

ஜப்பானில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் சனே தகாய்ச்சியின் ஆளும் கூட்டணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

கிழக்காசிய நாடான ஜப்பானில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது வழக்கம். கடந்த 2024இல் நடந்த தேர்தலில், எல்.டி.பி., எனும் லிபரல் டெமாக்ரடிக் கட்சிக்கு பெரும்பான்மைக்கு தேவையான இடங்கள் கிடைக்கவில்லை.

இதையடுத்து, அப்போதைய பிரதமர் ஷிகேரு இஷிபா சிறிய கட்சிகளின் ஆதரவுடன் சிறுபான்மை அரசை நடத்தினார்.

ஓராண்டு காலம் பதவி வகித்த அவர், ஊழல் குற்றச்சாட்டுகளில், கடந்தாண்டு ஒக்டோபரில் இராஜினாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து ஜப்பானின் முதல் பெண் பிரதமராக சனே தகாய்ச்சி பொறுப்பேற்றார்.

பாராளுமன்றத்தில் தன் கட்சிக்கான பிரதிநிதித்துவம் பெரும்பான்மைக்கும் குறைவாக இருப்பதால், நிலையான மற்றும் ஒரு வலிமையான அரசை அமைக்க வேண்டும் என்ற நோக்கில், பதவியேற்ற நான்கே மாதங்களில் பாராளுமன்றைக் கலைத்து தேர்தலை அறிவித்தார்.

அதன்படி, நேற்று முன்தினம் ஓட்டுப் பதிவு நடந்தது.

மொத்தமுள்ள 465 இடங்களுக்கான தேர்தலில் பிரதமர் தகாய்ச்சியின், எல்.டி.பி., கட்சி கூட்டணி சூப்பர் மெஜாரிட்டி எனும் மூன்றில் இரண்டு பங்கு இடங்களை கைப்பற்றி வரலாற்று சாதனை வெற்றியைப் பெற்றுள்ளது.

1986ஆம் ஆண்டுக்குப் பின் அந்த கட்சி பெறும் மிகப்பெரிய வெற்றி இதுவாகும். (நி)

# அதிகாரங்களுக்கு அ

# ஈரான் வெளியுறவு

(டெஹ்ரான்)

**ஈரான் அதிகாரங்க**
**பணியாது என்றும், யுரேனியம்**
**நிலைப்பாட்டில் உறுதியாக இ**
**அந்நாட்டு வெளியுறவு அமைச்**
**அராக்சி தெரிவித்தார்.**

ஈரான் அணுசக்தித் திட்டம் தொடர்பான முதற்கட்ட மறைமுகப் பேச்சுவார்த்தை மஸ்கட் தலைநகர் ஓமனில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஓமன் வெளியுறவு அமைச்சருடன் தனித்தனியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில், ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் பேசுகையில் அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாவது:

ஈரான் அணுகுண்டு தயாரிக்கவில்லை. ஆனால், அவர்கள் நம்முடைய அணுகுண்டு குறித்து அச்சம் கொள்கின்றனர்.

நம்முடைய அணுகுண்டு என்பது பெரும் அதிகாரச் சக்திகளுக்கு அடிப்பணிய மாட்டோம் என்பதே. பிறநாடுகளின் ஆதிக்கம், அழுத்தங்களுக்கு எதிராகச் செயற்படும் அதிகாரம் ஈரானுக்கு உள்ளது எனத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷ்கியான் "எக்ஸ்" தளத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வெளியிட்ட பதிவில், "பிராந்தியத்தில் நட்பு நாடுகளின் முயற்சியால் நடைபெற்ற ஈரான் - அமெரிக்கப் பேச்சுவார்த்தை ஓர் அடுத்தகட்ட நடவடிக்கை.

மரியாதை அளிப்போருக்கு ஈரான் எப்போதும் மரியாதை அளித்துள்ளது. ஆனால், இராணுவப் பலத்தைப் பயன்படுத்தினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

ஈரானில் மோசமடைந்து வரும் பொருளாதார நிலைக்கு எதிராக அரசைக் கண்டித்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதனிடையே, அணுசக்தி ஒப்பந்தம் தொடர் பாக ஈரானுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் போர்க் கப்பல்கள், விமானங்களை மத்திய கிழக்குப் பகுதியில் அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது.

கடந்த 2003 வரையில் அணுகுண்டு தயாரிக்கும் பணியில்

## 10 ஆண்டுக்குள் நிலவில் நகரம் எலான் மஸ்க் நம்பிக்கை

(வோஷிங்டன்)

செவ்வாய் கிரகத்தில் நகரை உருவாக்குவதற்கு முன்பாக, அடுத்த 10 ஆண்டுக்குள் நிலவில் ஒரு நகரத்தை உருவாக்கி விடலாம் என்று தொழிலதிபரும், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனருமான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது, நிலவில் ஒரு நகரத்தை உருவாக்கும் முயற்சியில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஏற்கனவே ஈடுபட்டு வருகிறது.

செவ்வாய் கிரகத்தில் ஒரு நகரை உருவாக்க 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகும்.


ஆனால், 10 ஆண்டுக்குள் நிலவில் ஒரு நகரத்தை உருவாக்க நம்மால் முடியும். ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் நோக்கம் எப்போதும் மாறாதது.

கோள்கள் ஒவ்வொன்றும் 26 மாதங்களுக்கு ஒருமுறை நேர்கோட்டில் வரும்போது மட்டுமே செவ்வாய்க் கிரகத்திற்குப் பயணம் செய்ய முடியும். அதுவும் செவ்வாய் கிரகத்திற்குச் செல்ல 6 மாத காலமாகும்.

ஆனால் நிலவுக்கு நாம் ஒவ்வொரு 10 நாட்களுக்கு ஒருமுறை விண்கலத்தை ஏவ முடியும். 2 நாட்களில் சென்றுவிட முடியும்.

இதன்மூலம், செவ்வாய்க் கிரகத்தை விட நிலவில் ஒரு நகரத்தை மிக வேகமாக உருவாக்க முடியும்.

அதே சமயம், 5 முதல் 7 ஆண்டுகளில் ஸ்பேஸ் எக்ஸ் செவ்வாய் கிரகத்திலும் ஒரு நகரத்தை உருவாக்குவதற்கான பணிகளும் தொடங்கப்படும், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# அடிபணிய மாட்டோம்

# வு அமைச்சர் உறுதி

ங்களுக்கு அடி
யம் செறிவூட்டும்
இருப்பதாகவும்
மைச்சர் அப்பாஸ்



ஈரான் ஈடுபட்டு வந்ததாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், சர்வதேச அணுசக்தி முக மையை குற்றம் சாட்டி வருகின்றன.

இருப்பினும், மின்சாரம் உள்ளிட்ட அமைதி யான பயன்பாடுகளுக்காக அணுசக்தி திட்டத்தை மேற்கொண்டு வருவதாக ஈரான் கூறி வருகிறது.

அணு ஆயுதம் தயாரிக்க 90 சதவீதத்துக்கு யுரேனியத்தை செறிவூட்ட வேண்டிய நிலையில், 60 சதவீதம் வரை ஈரான் செறிவூட்டியுள்ளது.

அணுசக்தித் திட்டம் தொடர்பாக ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே கடந்த ஆண்டில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

ஜூன் மாதத்தில் ஈரான் - இஸ்ரேல் இடையே நடைபெற்ற 12 நாள் போரில் ஈரானில் உள்ள அணுசக்தி மையங்கள் மீது அமெரிக்கா குண்டுவீசி தாக்குதல் நடத்தியது.

அணுசக்தித் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை எப்போது, எங்கு நடைபெறும் என்பது குறித்த தகவல் இன்னும் வெளியாகவில்லை. (நி)

## அடுத்தடுத்து இடிந்து விழுந்த கட்டடங்கள் 9 பேர் பலி

### லெபனானில் துயரம்



(திரிபோலி)

வடக்கு லெபனானின் திரிபோலி நகரில் அடுத்தடுத்து இரண்டு கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் பதிவானதாகவும், இந்தச் சம்பவத்தின் போது மீட்கப்பட்ட ஆறு பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கட்டடம் இரண்டு தொகுதிகளைக் கொண்டிருந்ததுடன், ஒவ்வொன்றிலும் ஆறு அடுக்குமாடி குடியிருப்புகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டடம் இடிந்து விழுந்த நேரத்தில் சுமார் 22 பேர் உள்ளே இருந்ததாக குடியிருப்பாளர்கள் மதிப்பிட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லெபனான் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அவசரகால மற்றும் நிவாரண நிறுவனங்களின் ஆதரவுடன் சிவில் பாதுகாப்பு குழுக்கள் இணைந்து மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பற்ற கட்டடங்கள் காரணமாக "திரிபோலியை பேரழிவால் பாதிக்கப்பட்ட நகரமாக அறிவிப்பதாக நகரபிதா அப்தெல் ஹமீத் கரிமே தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள மக்கள் அந்த நாட்டு பொலிஸாரால், குறித்த பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவவும், சூழவுள்ள கட்டடங்களில் வசிப்பவர்களுக்குத் தங்குமிடம் வழங்கவும் அனைத்து அவசர சேவைகளை வழங்கவும், மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறும், லெபனான் ஜனாதிபதி ஜோசப் அவுன் உத்தரவிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## 'அதிவேக ஓட்டப் பந்தய வீரருக்கே' சவால் விடும் 'போல்ட்' ரோபோ

(பீஜிங்)

உலகின் அதிவேகமாக ஓடக்கூடிய மனித உருவ ரோபோவான "போல்ட்" (Bolt) சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட்டின் நினைவாக இதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த ரோபோ வினாடிக்கு 10 மீற்றர் (10 m/s) வேகத்தில் ஓடி உலக சாதனை படைத்துள்ளது.




இது ஒரு மனித உருவ ரோபோ எட்டியுள்ள அதிகபட்ச வேகமாகும்.

175 சென்ரிமீற்றர் உயரமும், 75 கிலோகிராம் எடையும் கொண்ட இந்த ரோபோ, மனிதர்களைப் போலவே முழு உருவ அமைப்பைக் கொண்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் நான்கு கால்களில் ஓடும் ரோபோவை உருவாக்கி சாதனை படைத்த அதே குழுவினர், தற்போது இரண்டு கால்களில் ஓடும் இந்த அதிநவீன ரோபோவை உருவாக்கியுள்ளனர்.

சீனாவின் இந்தக் கண்டுபிடிப்பு ரோபோடிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் ஒரு மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

சிக்கலான நிலப்பரப்புகளில் வேகமாக இயங்குவதற்கும், எதிர்காலத்தில் பல்வேறு மனிதப் பணிகளுக்கு உதவுவதற்கும் இத்தகைய அதிவேக ரோபோக்கள் பயன்படுத்தப்படலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி மாத இராசி பலன்கள்

## எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்!



**கிரகநிலை** - தன வாக்கு ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - சப்தம ஸ்தானத்தில் குரு(வ) - பாக்கிய ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எதிலும் இலாபம் பார்க்காமல் நேர்மையினை எதிர் பார்க்கும் தனுசு இராசி அன்பர்களே! இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். பஞ்சம விரையாதிபதி செவ்வாயின் தைரிய ஸ்தான சஞ்சாரம் சுப பலன்களைத் தரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புக்கள் சிலருக்குக் கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்லும் நிலை உருவாகும். மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவார்கள்.

பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூடுதல் கவனத்துடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். அரசியல் வாதிகள் கட்சித் தலைமையின் ஆணையை மீறி தனி ஆவர்த்தனம் காட்ட வேண்டாம். கலைத் துறையினருக்கு வெளிநாட்டுப் புது நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் அகலும்.

**மூலம்:** இந்த மாதம் எடுத்த வேலையை சிறப்பாக செய்து முடித்து நற்பெயர் பெறுவீர்கள். அதே நேரத்தில் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்கள் கவனத்தை சிதறவிடாமல் மிகவும் நன்கு கவனித்து பாடங்களை படிப்பது நல்லது. சக மாணவர்களுடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த வங்கிக்கடன் கிடைக்கும். சக ஊழியர்கள் உங்




களை விமர்சித்தாலும் அனுசரித்துப் போங்கள்.

**பூராடம்:** இந்த மாதம் மன அமைதி உண்டாகும். எதிலும் நற்பலன் கிடைக்கும். திட்டமிட்டு செயலாற்றுவதிலும், உறுதியான முடிவு எடுப்பீர்கள். வாக்கு வன்மையால் காரிய வெற்றி உண்டாகும்.

எதிர்பாராத திடீர் செலவு உண்டாகலாம். அடுத்தவர் கூறுவதை தவறாக புரிந்துகொண்டு பின்னர் வருத்தப்படும் சூழ்நிலை ஏற்படலாம். புதிய மேலதிகாரியின் அறிமுகம் கிடைக்கும். புதிய பொறுப்புக்கள் கிடைக்கும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் கடவுள் பக்தி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல், சொத்து வாங்குவது ஆகியவற்றில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி நீங்கும்.

கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள். உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதை குறைத்துக் கொள்ளுங்கள்.

**பரிகாரம்:** குருவிற்கு சாமந்தி மலரை சமர்ப்பித்து வியாழக் கிழமையில் வணங்கி வர எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 01, 02

**அதிஷ்ட தினங்கள்:** 08, 09

## பண வரத்து அதிகரிக்கும்!



**கிரகநிலை** - இராசியில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு(வ) - அஷ்டம ஸ்தானத்தில் கேது எனக் கிரக நிலைகள் உள்ளன.


**பலன்கள்:** எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் பின் வாங்காத மகர இராசி அன்பர்களே! இந்த மாதம் எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். சுக்கிரன் சஞ்சாரம் அனுகூலமான பலன் தரும். பண வரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும்.

பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கு இடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதிற்கு திருப்தி தரும். உறவினர்கள் - நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும்.

பெண்களுக்குப் பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். சகாக்கள் மத்தியில் ஆதரவு பெருகும். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். பொது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கும் அளவுக்குப் பிரபலமாவார்கள். மாணவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் வரும்.

**உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மறைமுகப் பிரச்சினைகள் தீரும். தொடங்கிய வேலையை திட்டமிட்டபடி செய்ய முடியாமல் இழுபறியாக இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் நீங்கள் கூறுவதை ஏற்காமல் தங்களது விருப்பப்படி எதையும் செய்வார்கள். அரசியல்வாதிகளுக்கு சாதகமான சூழ்நிலையே உண்டு. அரசாங்க பணிகள் அனைத்தும் தொய்வு இல்லாமல் நடைபெறும்.

**திருவோணம்:** இந்த மாதம் கணவன், மனைவிக்கு இடையே ஒற்றுமை இருக்கும். பிள்ளைகளுக்




காக செலவு செய்ய வேண்டி இருக்கும். அடுத்தவர் கூறும் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதில் உள்ள நல்லது கெட்டதை யோசிப்பது நல்லது. பண விவகாரங்களில் கவனம் தேவை. மூத்த கலைஞர்களின் வழிகாட்டலால் வெற்றி பெறுவீர்கள். தொடந்து வரும் சவால்களைச் சந்தித்த பின்னரே வெற்றி கிட்டும்.

**அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எதையும் நன்கு யோசித்து பின்னர் செய்வது நன்மை தரும். மாணவர்கள் நிதானமாக ஆழ்ந்த கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது.

மனக்கஷ்டம், பணக்கஷ்டம் நீங்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு ஏற்ற காலம் இது. இரசனையைப் புரிந்துகொண்டு உங்கள் திறமையை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். பெண்கள் உடல் நலத்தில் மிகவும் கவனமாக இருத்தல் அவசியம்.

**பரிகாரம்:** விநாயகப் பெருமானுக்கு அறுகம்புல் மாலை சாற்றி அர்ச்சனை செய்து வர குடும்ப கஷ்டங்கள் நீங்கும். தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 03, 04

**அதிஷ்ட தினங்கள்:** 10, 11, 12

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 19)

# முறையான ஒப்பந்தம்; ஒரு பாதுகாப்பு வழிகாட்டி




**அறிமுகம்**

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது வாழ்நாள் சேமிப்பை முதலீடு செய்து ஒரு "கனவு இல்லத்தை" உருவாக்க வேண்டும் என்பது மிகப்பெரிய ஆசை. ஆனால், துரதிஷ்டவசமாகப் பல உரிமையாளர்கள் கட்டடக்கலை மற்றும் சட்ட நுணுக்கங்கள் பற்றிய போதிய அறிவின்மையால், வெறும் வாய்மொழி நம்பிக்கையின் அடிப்படையில் கட்டுமானப் பணிகளைத் தொடங்குகின்றனர். முறையான ஒப்பந்தம் இல்லாததால், இடையில் ஏற்படும் பணத் தகராறுகள், தரமற்ற வேலைப்பாடுகள் மற்றும் காலதாமதம் போன்ற சிக்கல்கள் அவர்களின் கனவை நனவாக்குவதற்குப் பதில் ஒரு பெரும் சுமையாக மாற்றி விடுகின்றன.

**1. ஒப்பந்தம் (Agreement) என்றால் என்ன?**

கட்டட ஒப்பந்தம் என்பது வீட்டு உரிமையாளருக்கும், கட்டுமானப் பணியை ஏற்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையே சட்டபூர்வமாக ஏற்படுத்தப்படும் ஒரு உடன்படிக்கை ஆகும். இதில் எத்தகைய வேலைகள் செய்யப்பட வேண்டும், அதற்கான கால அவகாசம் என்ன, பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்களின் தரம் மற்றும் அதற்கான கட்டணம் போன்ற அனைத்து விபரங்களும் எழுத்து பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும். இது இரு தரப்பினரின் உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாக்கும் ஒரு சட்ட ஆவணமாகும்.

**2. ஒப்பந்தத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவம்**

ஒரு கட்டுமானப் பணியில் ஒப்பந்தம் என்பது வெறும் காகிதம் அல்ல, அது ஒரு பாதுகாப்பு அரண். இதன் முக்கியத்துவங்கள் பின்வருமாறு:

❖ **தெளிவான வழிகாட்டுதல்:** என்ன வேலை செய்யப்பட வேண்டும் என்பதில் இரு தரப்புக்கும் தெளிவு இருக்கும்.

❖ **நிதி பாதுகாப்பு:** ஆரம்பம் முதல் இறுதி வரை எவ்வளவு செலவாகும் என்பதை முன்கூட்டியே கணித்து திட்டமிடலாம்.

❖ **தரக்கட்டுப்பாடு:** பயன்படுத்தப்படும் சிமெண்ட், கம்பி, கல் போன்ற பொருட்களின் பிராண்ட் மற்றும் தரத்தை ஒப்பந்தத்தில் குறிப்பிடுவதன் மூலம் தரத்தை உறுதி செய்யலாம்.

❖ **கால நிர்ணயம்:** வீடு எப்போது கட்டி முடிக்கப்பட வேண்டும் என்ற காலக் கெடுவை உறுதிப்படுத்த இது உதவும்.

**3. ஒப்பந்தம் மேற்கொள்ளாததால் ஏற்படும் விளைவுகள்**

முறையான ஒப்பந்தம் இல்லாமல் பணிகளைத் தொடங்கினால் பின்வரும் விபரீதங்களைச் சந்திக்க நேரிடும்:

❖ **திடீர் விலை ஏற்றம்:** வேலை நடந்து கொண்டிருக்கும்போது, ஒப்பந்தக்காரர் கூடுதல் பணம் கோரக்கூடும்.

❖ **தாமதமான பணிகள்:** குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை முடிக்காமல் இழுத்தடிப்பார்கள்.

❖ **சட்ட ரீதியான பலவீனம்:** ஏதேனும் ஏமாற்றம் நடந்தால், நீதிமன்றத்தை நாட முறையான ஆவணங்கள் இருக்காது.

❖ **மன உளைச்சல்:** வேலையில் திருப்தியின்மை மற்றும் பண இழப்பால் உரிமையாளருக்கு பெரும் மன அழுத்தம் ஏற்படும்.

**4. சில நடைமுறை உதாரணங்கள்**

♦ **உதாரணம் 1:** ஒரு உரிமையாளர் தனது வீட்டிற்கு "தேக்கு மர" ஜன்னல்கள் வேண்டும் என்று வாய்மொழியாகக் கூறுகிறார். ஆனால் ஒப்பந்தக்காரர் மலிவான மரத்தைப் பயன்படுத்துகிறார். ஒப்பந்தம் இல்லாததால், உரிமையாளரால் அதை சட்டப்படி நிரூபிக்க முடியாமல் போகிறது.

♦ **உதாரணம் 2:** இடையில் கட்டுமானப் பணி நிறுத்தப்பட்டால், அதுவரை கொடுத்த பணத்திற்கு எவ்வளவு வேலை நடந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்வதில் பெரும் சிக்கல் ஏற்படும்.

**5. ஒப்பந்தம் மேற்கொள்வதில் உள்ள சிக்கல்கள்**

ஒப்பந்தம் தயாரிக்கும்போது சில சவால்களும் எழுகின்றன:

❖ **தொழில்நுட்ப சொற்கள்:** கட்டுமானத் துறையில் பயன்படுத்தப்படும் நுணுக்கமான சொற்களை (Slab, Column strength, Curing time) சாதாரண உரிமையாளர்கள் புரிந்து கொள்வது கடினம்.

❖ **மறைமுகச் செலவுகள் (Hidden Costs):** மின்சாரம், நீர் இணைப்பு போன்ற சில செலவுகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப் படாமல் விடுவது பின்னர் பிரச்சினையை உருவாக்கும்.

நிச்சயமாக, ஒரு வீட்டை நிர்மாணிக்கும் போது வீட்டு உரிமையாளருக்கும் கட்டிட ஒப்பந்தக்காரருக்கும் (Contractor) இடையிலான ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் விரிவான கட்டுரை இதோ. இது A4 அளவில் சுமார் 3 பக்கங்களுக்குத் தேவையான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது.

**6. ஏன் மக்கள் ஒப்பந்தத்தைத் தவிர்க்கிறார்கள்?**

பலர் ஒப்பந்தம் செய்வதைத் தவிர்ப்பதற்கான காரணங்கள்:

❖ **அதிகபடியான நம்பிக்கை:** உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் அறிமுகமான ஒப்பந்தக்காரர் என்பதால் "அவர் ஏமாற்றமாட்டார்" என்ற கண்மூடித்தனமான நம்பிக்கை.

❖ **சட்ட நடைமுறை குறித்த பயம்:** முத்திரைத்தாள் மற்றும் வழக்கறிஞர் செலவுகளைக் கண்டு அஞ்சுவது.

❖ **அவசரம்:** வீட்டைத் தொடங்க வேண்டும் என்ற அவசரத்தில் முறையான திட்டமிடல் இல்லாமல் இறங்குவது.

**7. எவ்வாறு இலகுவாக்கலாம்? (தீர்வுகள்)**

ஒப்பந்த நடைமுறையை எளிதாக்க பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்:

❖ **மாதிரி ஒப்பந்தங்கள் (Templates):** இணையத்தில் கிடைக்கும் தரமான மாதிரி ஒப்பந்தங்களைச் சிறு மாற்றங்களுடன் பயன்படுத்தலாம்.

❖ **பிரித்து வழங்குதல்:** பணத்தை ஒரேயடியாகக் கொடுக்காமல், ஒவ்வொரு படிநிலை (Foundation, Roof, Finishing) முடிந்தவுடன் அதற்குரிய தொகையை வழங்கும் முறையை (Stage-wise payment) ஒப்பந்தத்தில் சேர்க்கலாம்.

❖ **நிபுணர் ஆலோசனை:** ஒரு பொறியியலாளரை வைத்து ஒப்பந்தத்தைச் சரிபார்ப்பது எதிர்கால இழப்புகளைத் தவிர்க்கும்.

**8. ஒப்பந்தத்தில் (Agreement) இருக்கவேண்டிய மிக முக்கியமான விடயங்கள் (Key Clauses)**

❖ **பொருட்களின்தரம் (Materials):** சிமெண்ட், கம்பி மற்றும் ரைல்ஸ் ஆகியவற்றின் பிராண்ட் மற்றும் தரத்தை வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும்.

❖ **பணம் செலுத்தும் முறை (Payment Plan):** வேலையின் ஒவ்வொரு படிநிலைக்கும் (அஸ்திவாரம், கூரை, பூச்சு வேலை) ஏற்ப மட்டுமே பணத்தைப் பிரித்து வழங்க வேண்டும்.

❖ **காலக்கெடு (Timeline):** வீட்டை முடிக்க வேண்டிய இறுதித் திகதியையும், தாமதமானால் ஒப்பந்தக்காரர் செலுத்த வேண்டிய அபராதத்தையும் குறிப்பிட வேண்டும்.

❖ **கூடுதல் செலவுகள் (Extra Work):** திட்டமிட்ட வரைபடத்தைத் தாண்டிச் செய்யப்படும் கூடுதல் வேலைகளுக்கு எவ்வளவு கட்டணம் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும்.

❖ **பராமரிப்பு காலம் (Maintenance):** வீடு ஒப்படைக்கப்பட்ட பின் 6 மாதங்களுக்குள் ஏற்படும் விரிசல் அல்லது கசிவுகளை ஒப்பந்தக்காரரே இலவசமாகச் சரிசெய்து தர வேண்டும்.

❖ **தொழிலாளர் பாதுகாப்பு (Labor Safety):** வேலைத்தளத்தில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துகளுக்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

**9. முடிவுரை**

வீடு என்பது வெறும் கல் மற்றும் மண்ணால் ஆன கட்டிடம் மட்டுமல்ல. அது ஒரு குடும்பத்தின் வாழ்நாள் கனவு. அந்தக் கனவு சிதைந்துவிடாமல் இருக்க "ஒப்பந்தம்" எனும் பாதுகாப்பு அவசியம். "நம்பிக்கை இருக்கட்டும், ஆனால் அது ஆவணப்படுத்தப்பட வேண்டும்" என்பதே கட்டுமானத் துறையில் வெற்றிக்கான சூத்திரம். முறையான ஒப்பந்தம் மேற்கொள்வதன் மூலம் உரிமையாளரும் ஒப்பந்தக்காரரும் ஒரு சுமூகமான உறவைப் பேணி, குறித்த காலத்தில் தரமான இல்லத்தைப் படைக்க முடியும்.

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

10.02.2026
தை 27, செவ்வாய்க்கிழமை
அட்டமி முற்பகல் 8.57 மணிவரை

விசாகம் முற்பகல் 9.22 மணிவரை
சுப நேரம் 11.04-12.34 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை

சந்திராஷ்டமம்:
அச்சுவினி

**வளவன்**


**மேஷம்**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


**ரிஷபம்**
தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


**மிதுனம்**
ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


**கடகம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


**சிம்மம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்பினைக் காணும் நாள், வாகன சுகமுண்டு, வங்கிகளில் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.


**கன்னி**
நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், சுப முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


**துலாம்**
பக்கபலமாக இருப்பவர்கள் எண்ணிக்கை கூடும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


**விருச்சிகம்**
குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு, விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், போசன சுகமுண்டு.


**தனுசு**
குல தெய்வ வழிபாட்டை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும்.


**மகரம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் கைகூடும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.


**கும்பம்**
நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.


**மீனம்**
உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

**வாலிபப் பருவத்தில் கல்விப் பயணத்தை நிதானமாக கடந்து செல்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 974





மணிமேகலை வெட்கத்துடனே சிறிது பீதியும் அடைந்தாள். பின்னர் தைரியப் படுத்திக் கொண்டு, "அரசே, தங்களுக்குத் தான் என் மனது தெரிந்திருக்கிறதே! அப்படியிருக்கும் போது, இந்தப் பேதைப் பெண்ணை எதற்காகச் சோதிக்கிறீர்கள்?" என்றாள்.

"மணிமேகலை! உன் மனது எனக்குத் தெரிந்திருக்கிறது. அது போலவே வல்லவரையனுடைய மனமும் எனக்குத் தெரிந்திருக்கிறது. உன்னுடைய பரிசுத்தமான அன்புக்கு அவன் பாத்திரன் அல்லவே என்றுதான் யோசிக்கிறேன். அதோ பார், இளைய ராணி நந்தினியும் வந்தியத்தேவனும் சல்லாபம் செய்வதை! நந்தினியின் முகத்தில் குடிகொண்டிருக்கும் குதூகலத்தைப் பார்!" என்றார்.

மணிமேகலை அவர் காட்டிய திசையைப் பார்த்தாள். அந்தக் கணத்தில் அசூயை என்னும் விஷம் அவளுடைய பால் போன்ற நெஞ்சில் ஏறிவிட்டது.

அதே சமயத்தில் வந்தியத்தேவனும் நந்தினியும் பேசிக் கொண்டிருந்தார்கள். நந்தினியின் தோள் ஒன்றில் புலி நகம் பட்டு இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மணிமேகலையைப் போல் நந்தினி கண்ணை மூடிக்கொள்ளவும் இல்லை. வந்தியத்தேவன் கைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள அவசரப்படவும் இல்லை. வந்தியத்தேவனோ, தன் கையைச் சுட்டுக் கொண்டிருந்த நெருப்புத் தணலைக் கீழே போடுவதுபோல் அவசரமாக இளைய ராணியைக் கரையில் இறக்கிவிட்டான். தண்ணீரில் முழுகி இருந்த போதிலும் நந்தினியின் உடம்பு உண்மையிலேயே சுட்டுக் கொண்டிருந்தது.

வந்தியத்தேவன் உள்ளத்தில் இனந்தெரியாத பீதி குடிகொண்டது. அவன் உடம்பு பதறியது. நந்தினி புன்னகையுடன் "ஐயா! ஏன் இவ்வளவு பதற்றம்? என்னைப் புலி என்று நினைத்துக் கொண்டீரா? அல்லது புலியைக் காக்க நினைத்துத் தவறாக என்னைக் கரை சேர்த்துவிட்டதற்காக வருத்தப்படுகிறீரா?" என்றாள்.

"அம்மணி! இவ்வளவு கொடூரமான வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம். தங்களைத் தொட்டு எடுத்து வரும்படி நேர்ந்து விட்டதை நினைத்து நெஞ்சு சிறிது கலக்கம் அடைந்தது"

"குற்றம் உள்ள நெஞ்சு அல்லவா? அதனால் கலங்குகிறது!"

"தேவி! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே!"

"குற்றம் செய்யவில்லை? தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு என் உதவியை நாடினீர். முத்திரை மோதிரத்தைக் கொடுத்து உதவினேன். பிறகு என் அந்தப்புரத்தில் திருட்டுத்தனமாகப் பிரவேசித்தீர்.

அப்போதும் உமக்குத் தீங்கு நேராமல் காப்பாற்றினேன். அதற்குக் கைம்மாறு என்ன செய்தீர்? எனக்குத் தெரியாமல், என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் திருடனைப் போல தப்பி ஓடிப்போனீர். பழையாறை இளைய பிராட்டியைச் சந்தித்த பிறகு என்னிடம் திரும்பி வருவதாகச் சொன்னீர். அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இவையெல்லாம் குற்றமல்லவா?"

"அந்தக் குற்றங்களை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவை ஒவ்வொன்றுக்கும் காரணம் இருக்கிறது. நான் பிறரிடம் சேவகம் செய்பவன். ஆதித்த கரிகாலருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டவன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## துன்பத்தின் முடிவு இன்பம்



அரசன் ஒருவன் அரியணையில் வீற்றிருந்தான். அப்பொழுது அங்கு ஓடி வந்த குடிமகன் ஒருவன், "அரசர் பெருமானே! நமது தலை நகரத்தை ஒட்டிய காட்டில் அற்புதமான சுனை ஒன்று உள்ளது. அதன் நீர் தேனைக் காட்டிலும் இனிப்பாக உள்ளது. அது போன்ற சுவையான நீரை என் ஆயுளில் நான் எங்கும் குடித்தது இல்லை. இந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லவே இங்கு ஓடோடி வந்தேன்" என்று மூச்சிறைக்கச் சொன்னான். இதைக் கேட்டு எல்லோரும் வியப்பு அடைந்தனர்.

உடனே அரசன், "நானும் அமைச்சரும் சில வீரர்களுடன் வருகிறோம். எங்களை அந்தச் சுனைக்கு அழைத்துச் செல். நீ சொன்னது உண்மைதானா என்று அறிந்து கொள்கிறோம்" என்று சொன்னான். எல்லோரும் புறப்பட்டனர். அவன் வழிகாட்டிக் கொண்டே அவர்களைச் சுனை இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றான். எல்லோரும் அந்த நீரை அள்ளிக் குடித்தனர். அவர்களுக்கு அது ஒன்றும் அதிக சுவை உடையதாகத் தெரியவில்லை. நகரத்திலேயே இதைவிட இனிமையான நீர் உள்ளது என்று சிலர் அரசனிடம் சொன்னார்கள்.

அரசன் கோபத்துடன் அவனைப் பார்த்து, நீயே இந்த நீரைக் குடித்துப் பார். நீ சொன்னபடி இது சுவையாக இல்லையே. ஏன்? என்று கோபத்துடன் கத்தினான். அவனும் அந்தச் சுனை நீரில் சிறிது அள்ளிக் குடித்தான். அரசே நான் குடித்தபோது இந்த நீர் மிகவும் இனித்தது. இப்பொழுது இது மற்ற நீரைப் போலத்தான் உள்ளது. இதற்குள் என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒரே மாயமாக உள்ளது என்றான்.

அமைச்சரைப் பார்த்து அரசன், இவன் உண்மை பேசுகின்றானா? இல்லை நம்மை ஏமாற்றிவிட்டு இப்பொழுது சமாளிக்கின்றானா? ஒரே நாளுக்குள் எப்படிச் சுனை நீரின் சுவை மாறும் என்று கேட்டான்.

அமைச்சர் அவனைப் பார்த்து நீ எப்பொழுது முதன் முதலில் அந்தச் சுனையில் நீர் குடித்தாய்? சொல் என்றார்.

"நான் காட்டில் வழி தவறிவிட்டேன். எனக்குக் கடும் நாவறட்சி, குடிக்க நீர் கிடைக்காதா என்று அலைந்தேன். அப்பொழுது இந்தச் சுனை கண்ணில் பட்டது. இதில் நீர் குடித்தேன். மிகவும் சுவையாக இருந்ததால் அரசரிடம் சொல்ல ஓடோடி வந்தேன். எனக்கு வேறொன்றும் தெரியாது என்றான்.

அமைச்சர் அரசனைப் பார்த்து, நா வறட்சியோடு அலைந்த இவனுக்கு இந்நீர் அமுதம் போல் சுவையாக இருந்ததில் வியப்பு இல்லை. கடும் முயற்சிக்குப் பின் கிடைக்கும் பொருள் மற்றவர் கண்ணுக்குச் சிறுமை உடையதாகத் தோன்றினாலும் அதைப் பெற்றவன் மிகப் பெருமையாகவே கருதுவான். இது உலக விதி. இவன் மீது எந்தத் தவறும் இல்லை" என்று விளக்கம் தந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

– திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களின் எதிர்பார்ப்பை மதித்த யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி

ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் என்பது மிகவும் முக்கியத்துவமானது. தான் சார்ந்த மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் – அவர்களின் உணர்வுகள் – எதிர்பார்ப்புகள் – சமூகத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் எனப் பல்வேறு விடயங்களைப் பிரஸ்தாபிப்பதாக ஆசிரியர் தலையங்கம் அமையும் – அமைய வேண்டும்.

• அந்தவகையில் யாழ்ப்பாண நகரைச் சார்ந்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில் பொலிஸார் ஈடுபட வேண்டும் எனப் பலதடவைகள் இவ்விடத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

தவிர, மிக அண்மையிலும் அந்த விடயத்தை வலியுறுத்தி; இதுவிடயத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தோம்.

இந்நிலையில் இப்போது யாழ்ப்பாண நகரில் எங்கெல்லாம் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதோ அங்கெல்லாம் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு நெருக்கடி நிலைகளைத் தவிர்த்து வருகின்றனர்.

ஆம், யாழ்ப்பாண நகரில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்ட சந்திகளில் நின்று நிலைமைகளை அவதானிப்பதுடன் போக்குவரத்து நெரிசல் எல்லை தாண்டும் போது, பொலிஸார் களத்தில் இறங்கி நிலமையைச் சுமுகமாக்குகின்றனர்.

இதையும் கடந்து, யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தியில் காலையிலும் பிற்பகலிலும் பொலிஸார் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மனம் நெகிழ்ந்து போகிறது.

ஆம், பலாலி வீதியும் நல்லூர் அரசடி வீதியும் சந்திக்கும் கந்தர்மடம் சந்தி மிகவும் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இடம்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை உள்ளிட்ட இதர கல்லூரிகள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் நொதேன் யுனிவேர்சிற்றி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களும் திருநெல்வேலி சந்தை உள்ளிட்ட வர்த்தக நிலையங்களுக்கும் செல்கின்ற கேந்திர நிலையமாக கந்தர்மடம் சந்தி உள்ளது.

இதற்கும் மேலாக, கனரக வாகனங்களின் பயணப் பாதையாகவும் நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலயத்துக்குச் செல்கின்ற முதன்மைச் சந்தியாகவும் கந்தர்மடம் சந்தி உள்ளது.

தவிர, பொதுமக்கள் பணி முடித்து வீடு திரும்புகின்ற மாலை நேரத்திலும் கந்தர்மடம் சந்தி நெருக்குண்டு தள்ளுண்டு தவிக்கும்.

இப்போது அந்தச் சந்தியில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருப்பது கண்டு மக்கள் புளகாங்கிதம் அடைகின்றனர்.

ஆக, மக்களின் எதிர்பார்ப்பை மதித்து யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் பணியில் பொலிஸாரை ஈடுபடுத்தியுள்ள யாழ்ப்பாணப் பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்ட வேண்டும்.

தனித்து குறை அளத்தல் என்பதைக் கடந்து, நல்லவற்றை ஊக்குவிப்பதும் பாராட்டுவதும் பத்திரிகைகளின் கடமையாகும்.

# எந்தக் கட்சியுடனும் இணைந்து செயற்படவேண்டிய அவசியமில்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

எமக்கு எந்தக் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதற்கான அவசியமும் இல்லை.ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும்.அது எங்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

அவர்கள் ஒன்றாக இருக்கும் போதே நாம் வெற்றி பெற்றோம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொதுஜன பெரமுனவை பலப்படுத்தும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்திருந்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எம்மை விட்டுப் போன பலர் எமது கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர். மக்களின் உண்மையான பிரச்சினையை கண்டுகொண்டு மக்களுக்கு பொய் சொல்லாத உண்மையை பேசுவோர் எம்மோடு இருக்கின்றனர். அவர்கள் மக்களின் பிரச்சினையை நன்கறிந்து வைத்துள்ளனர் என்றார்.

மேலும் இப்போது எந்தத் தேர்தலும் இல்லை. எந்தக் கட்சியும் எம்மை இணையுமாறு அழைப்பு விடுக்கவும்இல்லை. அதற்கு எந்த அவசியமும் இல்லை என்று சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# கச்சதீவு வருடாந்தத் திருவிழா கடற்படை முன்னாயத்த நடவடிக்கை

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் கடற்படையினர் முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை இலங்கையைச் சேர்ந்த நான்காயிரம் யாத்திரிகர்களும் இந்தியாவைச் சேர்ந்த நான்காயிரம் யாத்திரிகர்களுக்குமென எட்டாயிரம் யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை இம்முறை குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவிற்கு படகுச் சேவைக்கான ஒருவழிக் கட்டணமாக ரூபா 1200.00 அறவிடுவது எனவும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்கான ஒரு வழிக் கட்டணமாக 1000.00 அறவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறிகாட்டுவானிலிருந்து 46 தனியார் படகுகள் சேவையில் ஈடுபடவுள்ளது.

அத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து துறையினரின் பேருந்துகள் 27 ஆம் திகதி காலை 4.00 மணி முதல் பி. ப 01.00 மணி வரை யாழ்ப்பாணம்பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும்.

கடற்படையினரின் ஒழுங்கமைப்பில் கச்சதீவில் ஒரு அம்புலன்ஸ் படகும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஒழுங்கமைப்பில் 02 அம்புலன்ஸ் வண்டிகள் குறிகாட்டுவானிலும் தயார் நிலையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

---

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தின் 2026ம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள் நாளை மறுதினம் (12) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை முன்றலில் இடம்பெறவுள்ளது.(ம-7)

### ரூ. 80 இலட்சம் பெறுமதியான

# கிருமிநாசினிகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

கடல்மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 80 இலட்சம் ரூபா பெறுமதியான கிருமிநாசினிகள் மற்றும் விதைகள் ஆகியவற்றுடன் ஹெம்மாத்தகம பகுதியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமானமுறையில் வரி செலுத்தப்படாமல் கொண்டு வரப்பட்ட இந்தக் கிருமிநாசினிகள் மற்றும் விதைகள், விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தபோது கேகாலை நாரம்பத்த விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஹெம்மாத்தகம பிரதேசத்தைச் சேர்ந்த 44 மற்றும் 45 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### சிவராத்திரி நன்னாளில்

# மனோன்மணி அம்பாளுக்கு சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீமுதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி சிவராத்திரி நன்நாளில் சகஸ்ர (1008) சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் கிரியாதிலகம் சிவஸ்ரீ இரத்தின திருக்குமரக் குருக்களின் தலைமையில் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையின் செயலாளர் இ.கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார். (ம-7)

### நயினை குறிகாட்டுவான்

# இறுதிப்படகுச் சேவை நேரத்தில் மாற்றம்

நயினாதீவுக்கு பயணிக்கும் சுற்றுலாவிகள், பணியாளர்கள், அரச அலுவலர்கள், பிரதேச மக்களின் நலன் கருதி குறிகாட்டுவான் - நயினாதீவு இடையிலான இறுதிப் படகுச் சேவையின் நேரம் மாற்றப்பட்டுள்ளதாக நயினாதீவு தனியார் படகு உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் நயினாதீவில் இருந்து இறுதிப்படகுச் சேவையானது மாலை 5.30 மணிக்கு இடம்பெறும்.

அதேவேளை குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கான இறுதிப் படகுச் சேவையானது மாலை 6.00 மணிக்கு இடம்பெறும் என அச்சங்கம் அறிவித்துள்ளது. (ம-7)

# வட்டுக்கோட்டையில் மஹா சிவராத்திரி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தென்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் (கண்ணகையம்மன் ஆலயம்) தேவஸ்தான மஹா சிவராத்திரி உற்சவமானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (15) மாலை 4.30 மணிக்கு விஷேட பூஜைகளுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து நான்கு யாம பூஜைகளும் இடம்பெறவுள்ளது.

மஹா சிவராத்திரி விரதத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களினதும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களினதும் பங்களிப்புடன் விசேட கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

18

என்.சொக்கன்

1989இல் ஜார்ஜ் புஷ் (George Bush - அதிபரின் தந்தை) அமெரிக்க அதிபரானபோது PDBயின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. காரணம், ஜார்ஜ் புஷ் அரசியலுக்கு வருமுன், சிஐஏவின் இயக்குனராக இயங்கியவர்.

இதனால், உளவுத்துறையை எப்படி மேலும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்று அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

PDB அறிக்கையைத் தயாரித்து கொரியரில் அனுப்பிக் கொண்டிருந்த சிஐஏ அதிகாரிகளைக் கூப்பிட்டு, "இதை எனக்குப் படித்துக் காட்டுங்கள்" என்றார் புஷ்.

அதாவது, வெறுமனே அறிக்கை தயாரித்தால் போதாது. அதில் இடம்பெற்றிக்கும் செய்திகளின் பின்னணித் தகவல்கள், கூடுதல் விவரங்களை அதிபருக்கு விளக்கிச் சொல்லவேண்டும், அதிபருக்கு எழும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துவைக்கவேண்டும்.

அன்றைய PDBயைப் படிக்கும் அதிபர், ஏதேனும் கூடுதல் தகவல்களைக் கேட்கலாம். அப்படி அவர் கேட்கும் ஒரு விபரம் சிஐஏவிடம் இல்லாவிட்டால், எப்பாடுபட்டாவது அதைத் திரட்டியாகவேண்டும், மறுநாள்PDBயில் அந்தத் தகவல் இடம்பெறாவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரியின் வேலைக்குக் கத்திதான்.


சில சமயங்களில், கேள்வியின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, உடனடியாகவும் தகவல்களைத் திரட்டித் தரவேண்டியிருக்கும். இதற்காகத்தான், சிஐஏவின் அலுவலகம், அதிபர் மாளிகைக்கு அருகில் இருக்க வேண்டும் என்கிற வழக்கம் உருவாகிவிட்டது.

PDBயில் இடம்பெறும் தகவல்கள் இரகசியம் என்றால், அவை எங்கிருந்து, யாரால், எப்படித் திரட்டப்பட்டன என்பது இன்னும் இரகசியம். இதுமட்டும் வெளியே தெரிந்துவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் உயிருக்கு ஆபத்து என்பதால், சட்டப்படியே இந்தத் தகவல்களை சிஐஏ வெளியில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

உலகம்முழுவதும், நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் சிஐஏ அலுவலகங்கள் இயங்கிவருகின்றன. அமெரிக்காவின் எதிரி நாடுகளில் மட்டுமல்ல, நட்பு நாடுகளிலும் அரசியலில்போலவே, இங்கேயும் யாரும் நிரந்தரப் பகை கிடையாது, நிரந்தர நட்பும் கிடை யாது என்பது அமெரிக்காவின் கட்சி.

ஈரான் - ஈராக் போரின்போது, அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றிருந்த ஈராக், பின்னர்அவர்களுக்கே எதிராகத் திரும்பியது ஒரு பிரபலமான உதாரணம்.

இதனால், பகை நாடுகளோடு நிறுத்திக்கொள்ளாமல், தன்னுடன் சுமுக உறவு கொண்டிருக்கும் நாடுகளிலும் தொடர்ந்து உளவு பார்க்கிறது அமெரிக்கா. உறவும் வேண்டாம். பகையும் வேண்டாம் என்று ஒதுங்கிப் போகிறவர்களையும் விடமாட்டார்கள்.



சிஐஏ தனது அலுவலகங்களை "ஸ்டேஷன்கள்" (Stations) என்று அழைக்கிறது. சிஐஏவின் ஸ்டேஷன்கள் அமைந்திருக்கும் பெரும்பாலான நாடுகளின் பெயர்களைக் கூட நாம் கேள்விப்பட்டிருக்க மாட்டோம். ஆனால் அங்கேயும் என்ன நடக்கிறது என்கிற தகவல் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது.

அலுவலகம் என்றால், "சிஐஏ" என்று பளபளக்கும் நியான் விளக்குகளெல்லாம் இருக்காது. பெரும்பாலும் ஒரு நபர் அல்லது இரண்டு நபர் அலுவலகங்கள்தான். சில நாடுகளில் இருபது, முப்பது பேர் கொண்ட பக்கா நெட்வொர்க்கும் உண்டு.

இந்தக் குழுவுக்குப் பொறுப்பாக ஓர் அதிகாரி இருப்பார். அவரை 'COS' (Chief of Station) என்று அழைப்பார்கள். அந்நாடு சம்பந்தமான சகல தகவல்களையும் திரட்டித் தர வேண்டியது அவருடைய பொறுப்பு.

இதற்காக, COS சில அதிகாரிகளை நியமிப்பார். சில சமயங்களில், குறிப்பாக சிறிய நாடுகளில் அவரே இந்தப் பொறுப்பையும் கவனிக்க வேண்டியிருக்கும்.

இந்த அதிகாரிகள்தான், அமெரிக்காவுக்கு உதவக்கூடிய உளவாளிகள், ஒற்றர்களைத் தேடிக் கண்டறிகிறார்கள். "ஏஜென்ட்கள்" என்று அழைக்கப்படும் இவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து, அவர்கள் தருகிற தகவல்களைத் தொகுத்துச் சரி பார்த்து மேலிடத்துக்கு அனுப்ப வேண்டியது ஸ்டேஷனின்தலைமை அதிகாரியுடைய பொறுப்பு.

வெளிநாட்டு ஸ்டேஷன்கள்தான் சிஐஏவின் முக்கியமான நெட்வொர்க். ஆனால், பெரும்பாலான சமயங்களில் அவர்களுக்கு உள்நாட்டிலும் (அமெரிக்காவிலும்) கொஞ்சம் வேலை இருக்கிறது.

அவர்கள் சட்டப்படி, சிஐஏ உள்நாட்டில் தகவல் திரட்டக்கூடாது. ஒருவேளை ஏதேனும் காரணத்துக்காக அவர்கள் அமெரிக்கக் குடிமக்களை விசாரிக்க நேர்ந்தால், ஒளிவு மறைவு ஆகாது. "நாங்கள் சிஐஏ" என்று சொல்லிவிட்டு, கேள்விகளை நேரடியாகதான் கேட்க வேண்டும். மறைமுகமாக ஒற்றறியக்கூடாது.

ஆனால், வெளிநாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு வருகிற அரசியல்வாதிகள், அதிகாரிகள், விஞ்ஞானிகளின் கதை வேறு. பல சந்தர்ப்பங்களில் சிஐஏ அவர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அயல்நாடுகளை உளவு பார்த்திருக்கிறது.

சிஐஏவின் வருடாந்திர பட்ஜெட்டில், இதற்காகப் பெரிய தொகை ஒதுக்கப்படுகிறது. அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்பட முன் வருகிறவர்களுக்கு நல்ல சம்பளம், சௌகரியங்களைச் செய்து தருவார்கள். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பரம இரகசியமாகப் பாதுகாப்பார்கள்.

ஆனால், இதையெல்லாம் செய்தித்தாளில் கட்டம் கட்டி "ஒற்றர்கள் தேவை" என்று விளம்பரம் கொடுக்கமுடியாது. லென்ஸ் வைத்துத் தேடவேண்டியிருக்கும்.

அமெரிக்கர்கள் பிஸினஸ் விடயமாகவோ அல்லது சுற்றுலாவுக்காகவோ ஏதேனும் ஒரு முக்கியமான வெளிநாட்டுக்குச் சென்று திரும்பினால், உடனடியாக ஒரு சிஐஏ அதிகாரி அவர்களைச் சந்திப்பார். அங்கே என்ன பார்த்தீர்கள், அந்தத் தகவல்களில் நமக்கு உபயோகமானது என்ன என்றெல்லாம் விசாரித்துப் பதிவு செய்துகொள்வார்.

ஆனால், இதுமட்டும் போதாது. உள்ளூரில் இருக்கும் அயல்நாட்டுத் தூதரகங்களில் என்ன நடக்கிறது. அவர்களுடைய நாட்டிற்கும் தூதரகத்துக்கும் இடையே என்னென்ன தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்பதும் சிஐஏவுக்கு முக்கியம். இதற்காக, உள்ளூரில் ஒற்றர்களைத் தேடுகிறார்கள்.

இந்த விடயத்தில் சிஐஏவின் முதல் தூண்டில், வெளிநாட்டிலிருந்து இங்கே வருகிறவர்களில் யாருக்கெல்லாம் அமெரிக்க வாழ்க்கை பிடித்திருக்கிறது? அதன் சுகம், சௌகரியங்களில் மயங்கிப் போய்க் கிடக்கிறார்கள்?

அமெரிக்காவில் வாழ்வது ஜாலிதான். ஆனால், அதன் ஆடம்பரங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டுமானால் பணம் அதிகம் தேவை. "ஹ்ம்ம், நமக்குக் கொடுத்து வெச்சது அவ்வளவுதான்" என்று பெருமூச்சு விடும் வெளிநாட்டவர்கள் தான், சிஐஏவின் முதல் இலக்கு.

அடுத்தபடியாக, ஒவ்வொரு நாட்டிலும், அதன் ஆட்சியாளர்கள் அல்லது கொள்கைகளோடு பொருந்தாமல் சிலர் வருத்தத்தில் இருப்பார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாலையில்...

உயிரிழந்துள்ளார்.

இதில் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த கிருஷ்ண ராஜா சாரங்கன் (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த இளைஞனும் மேலும் ஒரு இளைஞனும் பொன்னாலை சந்தியில் இருந்து மாதகல் பக்கம் செல்கின்ற வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

இதன்போது அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியோரம் நின்ற பனை மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33,104)


மஹஜன சம்பத
திகதி 2026.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 6100
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
F 2 7 8 1 3 0
அத சம்பத
F 8 1 3 0
சீட்டிழுப்பு இலக்கம் 0675
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 216
வெற்றி இலக்கங்கள்
கன்னி 41 47 64
3403

தன நிதானய
திகதி 2026.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 2130
S 14 22 48 69 S
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 09/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2448
U 25 05 08 30 50

NLB ජය JAYA
திகதி 2026.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 0368
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
X 6 6 0 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4342
சீட்டிழுப்பு திகதி 09.02.2026
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
P 10 17 49 70
P
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 1409
வெற்றி இலக்கங்கள்
மகரம் 11 28 33 60 மகரம்


## நடத்துநரைத்...

தல் நடத்திய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த குறித்த பேருந்தில், இளைஞன் ஒருவர் மதுபோதையில் பேருந்தின் மிதிபலகையில் நின்றவாறு ஆபத்தான முறையில் பயணித்துள்ளார்.

இதன்போது, நடத்துநர் அவரைப் பேருந்தில் இருந்து இறங்குமாறு அல்லது பாதுகாப்பாக ஏறிப் பயணிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதனால் நடத்துநருக்கும் மதுபோதையில் இருந்த இளைஞனுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த இளைஞன் நடத்துநரைத் தாக்கியுள்ளார்.

இதனைக் கண்ட பயணிகள் மற்றும் அங்கிருந்த பொதுமக்கள் உடனடியாகச் செயற்பட்டு குறித்த இளைஞனை மடக்கிப் பிடித்தனர்.

பின்னர் இது குறித்து யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரிடம் அந்த இளைஞன் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## பேராசிரியராக...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் சசீலா பாலகோபி பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த நிதி முகாமைத்துவதுறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசீலா பாலகோபியின் மதிப்பீடு மற்றும் நேர்முகத்தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, நிதி முகாமைத்துவ துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசீலா பாலகோபி நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7)

## செம்மணி மனித...

கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை முன்னெடுக்க இருந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் முதல் யாழில் பல்வேறு தடவைகள் [illegible] மையால் புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நிற்கிறது.

இந்நிலையில் புதைகுழிக்குள் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்றும் நடவடிக்கை நேற்றுத் திங்கட்கிழமை நல்லூர் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை புதைகுழிக்குள் இருந்து வெள்ளம் வெளியேற்றும் நடவடிக்கைகளை யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின் குமார், சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ்சன், ஞா.ரஜித்தா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் நேற்றுத் திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். (ம-7,33)

## செம்மணி புதை...

கிழமை (09) அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் குறித்து மறுஆய்வு செய்யப்படும். மேலும் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பகுதிகளில் தேங்கிய மழைநீரை அகற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன் பின்னர், குறித்த இடத்தை ஆய்வு செய்த நீதிவான் அடுத்த விசாரணையை மார்ச் 16ஆம் திகதி நடத்தவும், அதே நாளில் மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான திகதியை நிர்ணயிப்பதாகவும் அறிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பொது வைத்திய சாலையின் தலைமை வைத்திய அதிகாரி, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான செலவு மதிப்பீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். (ம-,33)

## குற்...

பல வீடுகளை பல நபர்களுக்கு சட்ட விரோதமாக ஒதுக்கியதை அங்கீகரிக்கும் கடிதங்கள் வெளியிடப்பட்டது குறித்து வாக்கு மூலம் பெறவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ பாது[illegible] லாளராக இருந்தபோது இந்தச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை (6) எழுத்துமூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. (ம-7)

## ஆண் வேடமணிந்த பெண் கைது

ஆண் போன்று வேடமணிந்து "களுபாலம் டிலு" என்ற பெயரில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் ஆவார்.

சந்தேகநபரான பெண்ணிடமிருந்து சுமார் 150 இலட்சம்ரூபாய்பெறுமதியான ஹேஷ் மற்றும் குஷ் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)


உத்தியோகபூர்வ முடிவுகள்
09.02.2026 வெற்றி வாரம் 0808
ஆங்கில எழுத்து X மற்றும் வெற்றி இலக்கம் 6 4 8 8 5 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.874.167.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3074
சீட்டிழுப்பு திகதி 2026.02.09 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 24 34 38 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.96,896,865.60

சனிதா
திகதி 09.02.2026 வெற்றி வாரம் 5235
வெற்றி இலக்கங்கள் 06 34 39 50 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,800,855.60
ரூ. 50,000/-
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 904
சீட்டிழுப்பு திகதி 09.02.2026 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 23 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,824,240.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4786
சீட்டிழுப்பு திகதி 09.02.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 18 20 38 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9.117.557.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 38 41 44 60 64
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2250
09.02.2026 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,698,120.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2900
சீட்டிழுப்பு திகதி 2026.02.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,720,413.60
வெற்றி இலக்கங்கள் 10 25 55 62 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4969)

076 825 7716 (ஆகாஸ்)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


# டித்வாவுக்கும் மாகாணத் தேர்தலுக்கும் முடிச்சுப்போடும் அரசாங்கம்

## உதய கம்மன்பில காட்டம்

டித்வா புயல் தாக்கத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்க தீர்மானித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை நகைப்புக்குரியது எனப் பிவிதுருஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் கட்சி காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

டித்வா புயல் தாக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீண்டுவிட்டோம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. போதுமான நிதி கையிருப்பில் உள்ளதாக மத்திய வங்கி குறிப்பிடுகிறது. அவ்வாறாயின் ஏன் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது.

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு இரண்டு வாரங்களில் தீர்வு காணலாம். ஆனால் அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தேர்தலை பிற்போடவே முயற்சிக்கிறது என்றார். (ம-7)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை
முன்பாக 1 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண்தரை, நன்னீர் ஊற்று
- 18 அடிப் பாதையுடன் விற்பனைக்குண்டு

(2038)

தொடர்பு: 074 029 2338
076 990 3039



## உளச்சார்பு - நுண்ணறிவு வகுப்புக்கள்

கிராமசேவகர், ஆசிரியர் மற்றும்
அரசாங்க சேவைகளுக்கான தெரிவுப்
பரீட்சைகளுக்குரிய IQ வகுப்புக்கள்

ஆ. நித்தியானந்தன் (B.Sc, Dip in Ed)
தொடர்புகளுக்கு : 076 799 9005

இடம் : Physics Center
15B, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (6794)



## தொடர்பு கொள்ளவும்

விழிப்புணர்வு வீதி நாடகத்தில்
பங்குபற்ற விரும்பும் நடிகர்,
நடிகைகள் உடன் தொடர்பு
கொள்ளவும்.
ஊக்குவிப்புக் கொடுப்பனவு
வழங்கப்படும்.
(6795)

077 651 0375



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் பிரதான வீதியில்
அமைந்துள்ள பிரபல வெதுப்பகமொன்றிற்கு
கேக் ஐசிங் மற்றும் கேக் சம்பந்தமான
வேலைகளுக்கு முன்னனுபவம் வாய்ந்த
வேலையாட்கள் தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் (6787)

077 350 0605, 076 534 3034



## வேலையாட்கள் தேவை

- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO) HND or NCT - Civil
- கணிய அளவையியலாளர் (QS) HND or NCT QS
- உதவிக் கணக்காளர்
- அலுவலக உதவியாளர்
- உதவி கணிய அளவையியலாளர் (AQS)

சுயவிபரக் கோவையை Whatsapp / Email மூலம்
அனுப்பி வைக்கவும்
(6790)

077 724 5399
aonebuilders2001@hotmail.com / யாழ்ப்பாணம்



## காணி விற்பனைக்கு


சுன்னாகத்தில் இருந்து புன்னாலைக்
கட்டுவன் செல்லும் பிரதான
வீதியோரமாக 28 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு. வீதியோர
முகப்பு 300 அடி நீளம் கொண்டது. (6777)

076 742 4301, 075 710 9639
(தரகர் தொலைபேசி இலக்கம்)

Easy Real Estate


## மரண அறிவித்தல்

பிறப்பு 23 - 04 - 1958



இறப்பு 08 - 02 - 2026

## கார்த்தியேசு சிவராசா

இளவாலை வசந்தபுரத்தைப் பிறப்பிடமாகவும் வடக்கம்புரை சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தியேசு சிவராசா அவர்கள் கடந்த (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தியேசு - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தன் - வியாலாட்சி தம்பதியினரின் மருமகனும் செல்வமலர்(றஞ்சி) அவர்களின் அன்புக் கணவரும் ஜேசுயான் அவர்களின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவஞானம் மற்றும் அன்னபாக்கியம், ராணி, தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராணி, திருச்செல்வம், குலசிங்கராசா, சிவசோதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2026) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கராச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


வடக்கம்புரை,
சிவபூமி லேன், சுழிபுரம்.

தகவல் : குடும்பத்தினர்
075 572 6802

(6791)

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 . 04 . 1953



ஆண்டவன் அடியில் 10 . 02 . 2006

அமரர்

## லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

காலம் சென்றாலும் குறையாத நேசம்,
கண்ணீர் துடைத்தது தந்தையின் பாசம்.
சொல்லாத பாடங்கள் சொல்லியே தந்தீர்,
வாழ்வில் ஒளியாக நீங்களே என்றும்.
இருபது ஆண்டுகள் கடந்தாலும் அப்பா,
இதயத்தில் நீங்கள் என்றும் உயிராய் வாழ்கிறீர்...

உம் நினைவுகளுடன் என்றும் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

(6792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.